**2007–2008 ஆம் ஆண்டு மான்யக் கோரிக்கை எண் 42ன் மீதான விவாதத்தின்போது 16.4.2008 அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது –அறிவிப்பு எண் 13 –ஊராட்சி ஒன்றியங்களில் ஊராட்சி ஒன்றியத்தலைவர்களின் அலுவலகப் பயன்பாட்டிற்கான வாகனங்களுக்காக 385 ஊர்தி ஓட்டுநர் பணியிடங்கள் ஏற்படுத்துதல்**

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை

அரசாணை(நிலை) எண்:- 67

நாள்:-12.05.2008

படிக்கப்பட்டது:-

1. அரசாணை(நிலை) எண் 127, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை நாள் 12.7.2007
2. அரசாணை(நிலை) எண் 168,ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை நாள் 4.10.2007
3. அரசாணை(நிலை) எண் 191, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை நாள் 22.11.2007
4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண் 74662/06/PRI.I.I, நாள் 12.2.2008,

------

**ஆணை**

15.4.2008 மற்றும் 16.4.2008 அன்று நடைபெற்ற ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மான்யக் கோரிக்கை எண் 42ன் மீதான விவாதத்தின் போது பதிலளித்த மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் 16.4.2008 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்புகளில், அறிவிப்பு எண்:–13 பின்வருமாறு :

> ‘‘ ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் தற்போது இரண்டு வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளன. இதில் ஒரு வாகனத்தை, ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் பயன்படுத்திக் கொள்ள ஏதுவாக 100 லிட்டர் எரிபொருள் கூடுதலாக வழங்கப்படுகிறது. எனினும் ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவருக்கென தனியான ஒரு வாகனம் வழங்க வேண்டும் என்று வரப்பெற்ற கோரிக்கையை அரசு ஏற்று 385 ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்களுக்கும் புதிய வாகனங்கள் இந்த ஆண்டு வழங்கப்படும். இதற்கான 385 ஓட்டுநர் பணியிடங்கள் புதிதாக தோற்றுவிக்கப்படும்.‘‘

2. மேலும் மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சரை தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்ட உயர்மட்டக்குழுவினால் அளிக்கப்பட்ட பரிந்துரைகளில், பரிந்துரை எண் 13.2 ல் ஒவ்வொரு வட்டார அலுவலகங்களிலும் பயன்பாட்டில் இருந்த, ஒரேஒரு ஊர்தி ஊராட்சி ஒன்றியத்தலைவர், இரு வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றிய இரு பொறியாளர்களாலும் பயன்படுத்தப்பட்டு வந்தது. 1997–1999 ஆம் ஆண்டுகளில் அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலகங்களிலும், கூடுதலாக மற்றுமொரு ஊர்தியினை ஊராட்சி ஒன்றியங்களில் நடைபெறும் வளர்ச்சிப்பணிகளை அலுவலர்கள் மேற்பார்வையிடும் பொருட்டு வழங்கப்பட்டது. ஊராட்சி ஒன்றிய ஆணையர்களின் பயன்பாட்டிற்காக தனியாக ஊர்திகள் வழங்கப்பட்டுள்ள நிலையில் , மாவட்ட ஊராட்சிகளின் தலைவர்களுக்கு வழங்கப்பட்டது போன்று ஊராட்சி ஒன்றியத்தலைவர்களின் பயன்பாட்டிற்கு தனியாக ஒரு ஊர்தி வழங்கப்பட வேண்டும்

என உயர்மட்டக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேலே 1 ல் படிக்கப்பட்ட அரசாணையில் ஊராட்சி ஒன்றியத்தலைவர்களின் வாகன உபயோகத்திற்கான எரிபொருளானது 75 லிட்டரிலிருந்து 100 லிட்டர் ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. ஊராட்சி அமைப்புகளின் பயன்பாட்டிற்கென தனியாக ஊர்தியினை ஊரக வளர்ச்சித்துறையின் ஒருங்கிணைக்கப்பட்ட திட்ட உட்கூறுக்கென ஒப்படைக்கப்பட்ட / பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய் ( Scheme Component of pooled Assigned Revenue) நிதியிலிருந்து வாங்கிக்கொள்ள அனுமதி அளித்து மேலே 2 மற்றும் 3 ல் படிக்கப்பட்ட அரசாணைகளில் ஆணையிடப்பட்டுள்ளது. அரசுத்திட்டங்கள் அடித்தள மக்களை சென்றடையும் விதத்தில் செயல் படுத்தப்படுகின்றனவா என்பதை ஊராட்சி ஒன்றியத்தலைவர்கள் தன்னிச்சையாக ஆய்வு செய்வதற்காகவும், அவர்களுக்கு தனியாக ஒரு ஊர்தியும் அதற்குரிய ஓட்டுநரும் மிகவும் தேவையாக உள்ளது. எனவே ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் ஒன்றியத்தலைவர்களின் பயன்பாட்டிற்கான ஊர்தியினை இயக்க 385 ஊராட்சி ஒன்றியங்களில் தலா ஒரு ஊர்தி ஓட்டுநர் பணியிடம் வீதம் 385 ஊர்தி ஓட்டுநர் பணியிடங்களை ரூ 3200–85–4900 எனும் ஊதிய விகிதத்தில் ஏற்படுத்துமாறு மேலே 4 ல் படிக்கப்பட்ட கடிதத்தில் கோரியுள்ளார். மேலும் இப்பணியிடத்திற்காகும் செலவினத்தை அந்தந்த ஊராட்சி ஒன்றியத்தின் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

3. மேலே பத்தி 1ல் உள்ள மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சரால் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில் அறிவிப்பு எண் 13 ன் அடிப்படையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரால் அனுப்பி வைக்கப்பட்ட கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. அரசின் தீவிர பரிசீலனைக்குப்பின்பு ஊராட்சி ஒன்றியங்களில் ஊராட்சி ஒன்றிய தலைவர்களின் பயன்பாட்டிற்கான ஊர்தியினை இயக்கிடும் பொருட்டு இம்மாநிலத்தில் உள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தலா ஒரு ஊர்தி ஓட்டுநர் பணியிடம் வீதம் 385 ஊர்தி ஓட்டுநர் பணியிடங்கள் ரூ 3200–85–4900 எனும் ஊதிய விகிதத்தில் ஏற்படுத்தி அரசு ஆணையிடுகிறது. இப்பணியிடத்தில் நியமனம் செய்யப்படும் பணியாளர்கள் மேற்குறிப்பிட்ட ஊதியத்துடன் அமலிலுள்ள இதர படிகளையும் பெறத்தகுதியுடையவர்கள் ஆவர். இப்பணியிடத்திற்காகும் செலவினமானது அந்தந்த ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3ல் ஏற்படுத்தப்பட்ட ஓட்டுநர் பணியிடங்கள் திறன் பணியிடங்கள்(skilled posts) ஆகும். எனவே இப்பணியிடங்களை நிரப்பிட தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறையின் அரசாணை(நிலை) எண் 18, நாள் 25.2.2008 ல் ஆணையிடப்பட்டுள்ளவாறு ஒரு காலிப்பணியிடத்திற்கு 5 நபர்கள் என்ற விகிதத்தில் அந்தந்த ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து தகுதிவாய்ந்த நபர்களின் பட்டியல் பெறவேண்டும். அப்பட்டியலிலுள்ள நபர்களின் திறனை பொருத்தமான அதிகாரி (Competent Authority) மூலம் திறன் சோதனை செய்து ( Skill test) தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994–ன் பிரிவு 96–ல் குறிப்பிட்டுள்ள நியமனக்குழு மூலம் ஊராட்சி ஒன்றியப்பணியாளர்களை நியமனம் செய்ய கடைபிடிக்கப்படும் விதிகள் மற்றும் நெறிமுறைகளைப் பின்பற்றி ஓட்டுநர் பணியிடங்களை நிரப்புமாறு ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

5. இப்பணியிடத்தில் நியமனம் செய்யப்படும் பணியாளர்கள் அனைவரையும் பங்களிப்பு ஓய்வூதியத்திட்டத்தின் ( Contributory Pension Scheme) கீழ் கொண்டு வரப்பட வேண்டும்.

6. மேலே 1ல் படிக்கப்பட்ட அரசாணையின்படி ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியக்குழு தலைவரும் வாகன உபயோகத்திற்கான எரிபொருளை 100 லிட்டருக்கு மிகாமல் பயன்படுத்துதல் வேண்டும்.

7. ஊராட்சி ஒன்றியத்தலைவர்களின் அலுவலகப் பயன்பாட்டிற்கென வாகனமும் , ஊர்தி ஓட்டுநரும் மற்றும் எரிபொருளும் ஒதுக்கீடு செய்யப்படுவதால் அவர்கள் ஊராட்சி ஒன்றிய ஆணையர்களின் வாகனங்களை பயன்படுத்துவது இதன்மூலம் தடைசெய்யப்படுகிறது.

8. இவ்வாணையானது நிதித்துறையின் அ.சா. எண் 764/FS/P/08 நாள் 4.3.2008 ன் மூலம் ஒப்புதல் பெறப்பட்டு வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வர்தன் ஷெட்டி**
சிறப்பு ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர்.